அனுப்புநர்
முனைவர். ச. கண்ணப்பன்,
பள்ளிக்கல்விஇயக்குநர்,
பள்ளிக்கல்விஇயக்ககம்,
சென்னை – 06

பெறுநர்
முதன்மைகல்விஅலுவலர்கள்
அனைத்துமாவட்டங்கள்

ந.க. எண். 19528/எம்1/இ1/2024 நாள். 03 .12.2024

பொருள்: பள்ளிக்கல்வி – திருக்குறளை இயற்றிய அய்யன் திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவியது– வெள்ளிவிழா ஆண்டு – 01 ஜனவரி 2025 முன்னிட்டு – பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் முற்றோதல் போட்டிகள் நடத்துதல் – சார்பு.

பார்வை :
1. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசுக் கடித எண் 8882588/தவ–2–2/2024–2 நாள் 29.11.2024
2. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசுக் கடித எண் 8677226/தவ–2–2/2024–3 நாள் 04.11.2024
3. இவ்வலுவலக கடிதம் ந.க. எண். 19528/எம்1/இ1/2024 நாள். 14.11.2024

-----

மேற்காணும் பொருள் தொடர்பாக பார்வை 2 இல்காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தின் மீது முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை நிறுவப்பட்டு இந்நிகழ்வின்25 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில் ஜனவரி மாதம் 1 ஆம் தேதி 2025 அன்று சிறப்பு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அரசு பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை போட்டிகள் பல மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது . இதன் தொடர்ச்சியாக பள்ளிகளில் திருக்குறள் முற்றோதல் போட்டிகள் கீழ்காணும் தேதிகளில் நடத்தப்பட வேண்டும் என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. பள்ளி அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு முதலிடம் பெறும் மாணவர்களுக்கு இதில் தேர்வு செய்யப்படும் முதல் இடம் பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் இணையவழியில் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மற்றும் இரண்டாம் இடங்களை பெறும் மாணவர்களை மாநில அளவில் இணைய வழியில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள செய்ய வேண்டும் .

| வ. எண் | போட்டிகள்விவரம் | போட்டிநடைபெறும்நாட்கள் |
|---|---|---|
| 1 | பள்ளி அளவில் போட்டிகள் | 06.12.2024 |
| 2 | மாவட்ட அளவில் போட்டிகள் | 14.12.2024 |
| 3 | மாநில அளவில் பரிசுக்கான தெரிவு | 19.12.2024 |

மேலும் திருக்குறள் முற்றோதல் சார்ந்து தங்கள் மாவட்டத்திலுள்ள மாணவர்களின் விவரங்களையும் திருக்குறள் சார்ந்து சிறப்பு திறன் பெற்ற மாணவர்களின் விவரங்களையும் இணைப்பில் கண்ட படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மேலும் இணையவழி 'Link' விவரங்களை அந்தந்த மாவட்ட நிலையில் உருவாக்கி இப்போட்டிகளை நடத்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்

இணைப்பு: படிவம் 1 மற்றும் 2

நகல்:

1. தொடக்க கல்வி இயக்குநர்,
   தொடக்க கல்வி இயக்ககம்,
   சென்னை–06 (தகவலுக்காக அனுப்பப்படுகின்றது).

2. இயக்குநர், தனியார் பள்ளிகள்இயக்ககம்
   சென்னை –06 (தகவலுக்காக அனுப்பப்படுகின்றது)

3. அரசு துணை செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை –09 (தகவலுக்காக அனுப்பப்படுகின்றது)

படிவம்–1

திருக்குறள் முற்றோதல்

மாவட்டம்:

| வ. எண் | மாணவர் பெயர் | பள்ளியின் பெயர் | தலைமை ஆசிரியர் தொலைபேசி எண் | முற்றோதலில் ஒப்பிக்கும் குறள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | | | |

படிவம் –2

திருக்குறள் சார்ந்து சிறப்பு திறன் பெற்ற மாணவர்களின் விவரம்

மாவட்டம்:

| வ. எண் | மாணவர் பெயர் | பள்ளியின் பெயர் | தலைமை ஆசிரியர் தொலைபேசி எண் | சிறப்புதிறன் |
|---|---|---|---|---|
| | | | | |